**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**

C.C. 841/2023

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. குமரேஷ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. தங்கப்பாண்டி** | **Calling** | : | **IT Engineer** |
| **Village** | : | **நந்தவனப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 27 |
| | | | **Dated** | : | 03.03.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 2), **திரு. குமரேஷ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஐடியில் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். அசா. 1 என்னுடைய பெரியம்மா மகள். 05.06.2023ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் எனது தம்பி இந்தியன் என்பவருக்கு அசா. 1 போன் செய்து, எனது அண்ணன் கண்மணி ராஜன் நல்லாம்பட்டியில் உள்ள வீட்டில் இருந்து திண்டுக்கலுக்கு இரண்டு சக்கர வாகனமான பஜாஜ் பிளாட்டினம் என்ற வாகனத்தில் சென்று கொண்டு இருந்தபோது, காவேரி நகரில் உள்ள சச்சின் டீ ஸ்டால் அருகே சென்று கொண்டு இருந்தபோது, எனது அண்ணன் ஓட்டி வந்த இரண்டு சக்கர வாகனத்திற்கு எதிரே வந்த ஆட்டோ மோதி விழுந்துவிட்டார். அதில் என் அண்ணனுக்கு இடது

கணுக்கால், இடது காலில் காயமும், நெஞ்சுப் பகுதியில் உள்காயமும் ஏற்பட்டது. எனது தம்பி இந்தியன் அங்கிருந்த ஒரு ஆட்டோவில் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அன்று அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பலனின்றி எனது அண்ணன் 08.06.2023ம் தேதி இறந்துவிட்டார். விபத்து ஏற்பட்ட அடுத்த நாள் மதுமிதா வந்துவிட்டார். இது சம்மந்தமாக நானும், மதுமிதாவும் திண்டுக்கல் தாலுகா காவல்நிலையம் சென்று மதுமிதா புகார் கொடுத்தார். அந்தபுகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அந்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்தினை ஏற்படுத்திய ஆட்டோவை ஓட்டிவந்த ஓட்டுநர் வரதராஜன் என பின்னர் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

விபத்து சம்மந்தமாக நேரடியாக எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்தில் இறந்துபோன நபர் யார் என்று கேட்டால் என்னுடைய பெரியம்மா மகன். இந்த விபத்து சம்மந்தமாக நான் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், விபத்து நடந்த அந்த மாலையே என்னையும், எனது தம்பி இந்தியனையும் போலீசார் என்னை விசாரித்துவிட்டு சென்றனர். அன்று என்னிடம், எனது தம்பியிடம் புகார் எதுவும் வாங்கவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சி சதீஸ்குமார் எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால், அவர் உறவினர் இல்லை, சம்பவ இடமான காவேரி நகரில் சச்சின் டீ ஸ்டால் வைத்துள்ளார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல விபத்து சம்பவம் எதுவும் நிகழவில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன

கண்மணி ராஜன் எனது அண்ணன் முறை என்பதாலும், அவருக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.03 17:25:44 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

C.C. 841/2023

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சதீஸ்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முனியாண்டி** | **Calling** | : | **டீக்கடை** |
| **Village** | : | **காவேரி நகர்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 43 |
| | | | **Dated** | : | 03.03.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 2), **திரு. சதீஸ்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டீக்கடை வைத்துள்ளேன். 05.06.2023ம் தேதி மாலை சுமார் 04.30 மணி முதல் 05.00 மணி வரை இருக்கும். நான் டீக்கடையில் இருந்தபோது, வண்டி மோதிய சத்தம் கேட்டு போய் பார்த்தேன். ஆட்டோ நத்தம் – காவேரி ரோட்டில் வந்து கொண்டு இருந்தது. இரண்டு சக்கர வாகனம் நல்லாம்பட்டி – நத்தம் ரோட்டில் வந்து கொண்டு இருந்தது. இரண்டு வாகனங்களும் மோதிக் கொண்டன. இரண்டு சக்கர வாகனத்தை ஓட்டிக் கொண்டு வந்தவர் கண்மணி ராஜா என்பவர் ஆவார். ஆட்டோவை ஓட்டிக் கொண்டு வந்தவர் ஆஜர் எதிரி தான். இரண்டு சக்கர வாகனத்தில் வந்த கண்மணி ராஜாவுக்கு நெஞ்சில் ஊமைக்காயமும், காலில் இரத்தக்காயம் ஏற்பட்டது.

மேற்படி கண்மணி ராஜாவிடம் போன் நம்பர் வாங்கி மதுமிதா என்பவருக்கு விபத்து பற்றி தகவல் கொடுத்தேன். ஒரு ஆட்டோவில் கண்மணி ராஜாவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி கண்மணி ராஜா சிகிச்சை பலனலிக்காமல் இரண்டு நாட்கள் கழித்து இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தார்களா என்றால், என் முன்பாக தட்டச்சு செய்யவில்லை. ஆனால் போலீசார் என்னை விசாரித்து எழுதிக் கொண்டு போனார்கள். விபத்து நடந்த இடத்திற்கும், எனது கடைக்கும் சுமார் 25 அடி தூரம் இருக்கும். எனது கடையின் எந்த திசையில் விபத்து நடந்தது என்றால், தெற்கு பக்கம் நடந்தது. அந்த சமயத்தில் நான் டீ போட்டுக் கொண்டு இருந்தேன். சத்தம் கேட்டுத்தான் சம்பவ இடத்திற்கு நான் போனேன். நான் போய் பார்க்கும் போது பக்கத்தில் இருந்தவர்கள் அவரை ஒரு சேரில் உட்கார வைத்து இருந்தனர். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.03 17:25:55 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.